## ஊவா மாகாண சபையின - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

**(அ) மாகாண சபை நிதியக் கணக்கு**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2012 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய கணக்குகள்**

மீளாய்வாண்டு தொடர்பாக 2012 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | 2011 ஆம் ஆண்டு தொடர்பாக | | | |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்கு | 27 | 27 | இல்லை | இல்லை |
| (ii) | வருமானக் கணக்கு | 01 | 01 | இல்லை | இல்லை |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 28 | 24 | 04 | 14 |
| (iv) | வாணிப முற்பணக் கணக்குகள் | 09 | 04 | 05 | 04 |
| (v) | நிதியக் கணக்குகள் | 09 | 04 | 05 | 34 |
| (vi) | நியதிச் சட்டக் கணக்குகள் | 03 | இல்லை | 03 | 28 |

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊவா மாகாண சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்க என்னால் முடியாதுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

ஊவா மாகாண சபை அச்சகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபையின் அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் 13 அலுவலகங்களின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புகள் ரூபா 4,479,491 தொகை ஒதுக்கீட்டுக் கணக்குகளில் டீஜீஎஸ்ஏ 9 பொறுப்புகள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண வருமான ஆணையாளர் பெயரில் பேணப்பட்டுவரும் சேகரிப்புகள் நடைமுறைக் கணக்குகளில் ரூபா 36,738,329 கூட்டுத்தொகை ஊவா மாகாண சபை நிதியத்திற்கு உரித்தான முக்கிய நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அவ் வருமானங்கள் மீளாய்வாண்டின் திரண்ட வருமானக் கணக்கிலும் இறுதி நிதிக்கூற்றிலும் கைவிடப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்காக ஊவா மாகாண தலைமை அமைச்சு, நிதி, திட்டமிடல், சட்ட மற்றும் சமாதான உள்ளூராட்சி, கல்வி, போக்குவரத்து, கலாசார அலுவல்கள், காணி, நீர்ப்பாசன, பொருளாதார மேம்பாட்டு, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்ட மாகாண நிதி முகாமைத்துவ திணைக்களத்திற்கு மீள திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 22,000,000 தொகையான கட்டுநிதி தொடர்பான, கட்டுநிதிப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல வருட காலமாக ஊவா மாகாண இறுதி நிதிக்கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட சமூக நலன்புரி நிதியத்திற்குரிய

நடைமுறைக் கணக்கு, 2011 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வங்கியால் கணக்குகள் மூடப்பட்டு 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியான ரூபா 53,748 தொகை சமூக சேவைகள் திணைக்களத்திற்கு மீண்டும் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை இறுதி நிதிக்கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் அம் மீதி ரூபா 100,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2011 ஆம் ஆண்டின் போது ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 633,100,557 தொகையில் ரூபா 296,182,934 தொகை 2011 ஆம் ஆண்டின் பெறுவனவுகளைச் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளானதுடன் எஞ்சிய ரூபா 336,917,623 தொகை 2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதியைத் தீர்ப்பதற்காகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், 2011 சனவரி 01 இல் உள்ளவாறு பிழைகளைச் சீராக்கியதன் பின்னரான மீதியான ரூபா 310,625,713 தீர்க்கப்படுவதற்காக ரூபா 336,917,622 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், ஓய்வூதியத் திணைக்களத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 26,291,909 ஆகக் காணப்பட்டது.

(ஊ) நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களாகக் காண்பிக்கப்பட்ட விவசாய அமைச்சின் நாற்று உருளைக் கிழங்குக் கணக்கு ரூபா 42,501,491 ஆகவும், போலிச் சொத்தாகக் காண்பிக்கப்பட்ட விவசாயத் திணைக்களத்தின் சம்பளத் தொகையான காணாமற்போன ரூபா 1,035,989 தொகை 1990 ஆம் ஆண்டின் போது நேர்ந்த நிதிப் பிரிவின் நிதி மோசடி ரூபா 595,000 தொகையும் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையான ரூபா 4,300,000 தொகை 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நீண்ட காலமாகச் செயற்பாடற்றுக் காணப்படும் மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான 08 கடன் முற்பணக் கணக்குகளின் வரவு மீதிக் கூட்டுத்தொகையான ரூபா 8,575,743 தொகையும் 03 செலவு

மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 1,115,681 தொகையும் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 02 வணிக முற்பணக் கணக்குகளுக்கு உரித்தான 2007 ஆம் ஆண்டு முதல் நிலவும் ரூபா 26,550,202 தொகை தீர்க்கப்படாது வரவு மீதி 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மாகாண விவசாய, விவசாய அபிவிருத்தி, விலங்கின உற்பத்தி, நன்னீர் மீன் பிடித்துறை, சுற்றாடல் மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சிற்கு உரித்தான கப் வண்டிக்கு 2011 மே 26 ஆம் திகதி நிகழ்ந்த விபத்தால் ஏற்பட்ட ரூபா 496,605 தொகையான நட்டம் டீ.ஜீ.எஸ்.ஏ – 8 படிவத்தில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மாகாண கல்வித் திணைக்கள அலுவலகத்தில் 7 உத்தியோகத்தர்களினதும் ஐந்து வலயக் கல்வி அலுவலகங்களில் 188 உத்தியோகத்தர்ளினதும் ரூபா 8,235,113 கூட்டுத்தொகையான கடன் மீதி மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பதுளை வலயக் கல்வி அலுவலகத்தின் இரு உத்தியோகத்தர்களும் வெலிமட வலயக் கல்வி அலுவலகத்தின் 04 உத்தியோகத்தர்களால் பொறுப்பேற்கப்பட நிராகரிக்கப்பட்ட ரூபா 469,500 கூட்டுத்தொகையான கடன் தொகை மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருந்த பண்டாரவெல வலயக் கல்வி அலுவலகத்தின் 23 உத்தியோகத்தர்களின் ரூபா 568,762 கூட்டுத்தொகையான கடன் மீதிகளும் வெலிமட வலயக் கல்வி அலுவலக 02 உத்தியோகத்தர்களின் ரூபா 67,650 கூட்டுத்தொகையான கடன் மீதியும் தீர்க்கப்படாது கடனாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(க) ஒக்கம்பிட்டிய நாற்றுப் பண்ணை முற்பணக் கணக்குகளின்

கூட்டுத்தொகை ரூபா 3,754,798 தொகையான 09 அதிகரித்துக் காட்டல்களும் ரூபா 1,200,308 கூட்டுத்தொகையான 06 குறைத்துக் காட்டல்களும் காணப்பட்டன.

(கா) பொரளந்த விலங்குப் பண்ணையில் வணிக முற்பணக் கணக்குகளில்,

(i) ரூபா 2,835,447 தொகையான சம்பளங்கள், செலவினங்களின் பொழிப்பின் பிரகாரம் ரூபா 2,570,798 ஆனமையால் சம்பளச் செலவினமான ரூபா 264,469 தொகை கூடுதலாகப் பதியப்பட்டிருந்தது.

(ii) வேறான சொத்தாக வெளிப்படுத்தப்பட வேண்டிய 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விலங்கின மீதியான ரூபா 2,731,190 தொகையான சாதாரண இருப்பு விடயமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ஆண்டின் போது விலங்கின மீதியில் ரூபா 26,100 இலான (கி.கி. 226) அதிகரிப்பு கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 2010 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,756,450 பெறுமதியான மற்றும் 27,564 கி.கி. ஆன விலங்குகளின் மீதி 2011 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2,756,450 தொகையும் கி.கி. 23,598 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக கி.கி. 3,867 இருப்பு மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) பௌதீக ரீதியாக நிலவாத ரூபா 211,821 தொகையான பொலிதீன் இருப்பு ஐந்தொகையில் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) 2011 யூலை 29 ஆம் திகதிய யூவீ/பீடீ/சீ/2011/26 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டிற்கு முன் கழற்றி அகற்றப்பட்ட ரூபா 324,290 பெறுமதியான நுண் நீர் முறைமை புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பை மதிப்பிடுகையில் பண்ணையில் நிலவும் புற்பயிர்ச்செய்கை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. புற்பயிர்ச்செய்கைக்காக வேறான உற்பத்திக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) ஆயுர்வேத திணைக்களத்தின் தனியான மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் காண்பிக்கப்பட்ட சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 314,202 ஆலும், இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 1,300 ஆலும் இடமாற்றத்தைப் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 310,913 ஆலும் கணக்கிற்கு இணைக்கப்பட்டிருந்த அப் பட்டோலைகளின் கூட்டுத்தொகையுடன் இணங்கியிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மாகாண அரசாங்க ஊழியர்களின் கடன் மற்றும் முற்பணக் கணக்குகளின் மீதியும் ஒவ்வொரு 08 அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/அலுவலகங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளுடனான குறிப்பு (ii) முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அத்திகதிக்கான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,995,655 ஆல் வேறுபட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி முகாமைத்துவ திணைக்களத்தின் புத்தகங்களில் காணப்படும் 09 மாகாண அரசாங்க ஊழியர்களின் கடன் மற்றும் முற்பணக் கணக்குகளுக்கும் ஒவ்வொரு அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட

ஒதுக்கீட்டுக் கணக்குகளுடனான குறிப்பு (ii) முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அத்திகதிக்கான மீதிகளுக்கும் இடையேயான கூட்டுத்தொகையில் ரூபா 6,173,541 வேறுபட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகையும் ஒவ்வொரு அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளுடனான குறிப்பு (iii) கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அத்திகதிக்கான 11 வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 55,412,522 ஆலும், 05 செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,170,861 ஆலும் வேறுபட்டிருந்தது.

(ஈ) மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 301,540,397 ஆகக் காணப்பட்டதுடன் தனியான மீதி பதிவேட்டின் கூட்டுத்தொகை ரூபா 304,982,452 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதித் தலைமைச் செயலாளர் (பொறியியலாளர்) அலுவலகத்தின் நிதிப் பிரமாணம் 427 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகளின் மீதி நிதி முகாமைத்துவத் திணைக்களத்தின் புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டிராமையால் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் ஆரம்ப மீதியும் இறுதி மீதியும் மாகாண சபை நிதிக்கூற்றுக்களின் மீதியும் ரூபா 8,383,617 ஆல் வேறுபட்டிருந்தது.

(ஆ) வீதி அபிவிருத்தி திணைக்களப் பொது வைப்புக் கணக்கின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 28,939,664 தொகையான இறுதி மீதி மாகாண சபை நிதி முகாமைத்துவ திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 77,274,714 ஆனமையால் ரூபா 48,335,050 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 வங்கிக் கணக்கிணக்கங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஊவா மாகாண வீதி, மக்கள் போக்குவரத்து அதிகாரசபை அரசாங்க வங்கி ஒன்றில் பேணப்பட்டுவந்த நடைமுறைக் கணக்கு ரூபா 42,702 ஆன தொகையுடன் ஏழு ஆண்டுகளுக்கு மேலான காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 14 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு 06 மாதங்களுக்கு மேல் கடந்திருந்த தேறாத ரூபா 40,962,149 கூட்டுத்தொகையான 206 காசோலைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 17 வங்கிக் கணக்குகளில் வழங்கப்பட்ட எனினும் 06 மாதங்களுக்கு மேல் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 6,446,807 கூட்டுத்தொகையான 690 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 07 வங்கிக் கணக்குகளுக்கு உரித்தான இனங்காணப்படாத வரவு ரூபா 2,228,122 ஆகக் காணப்பட்டதுடன் 06 வங்கிக் கணக்குகளுக்கு உரித்தான இனங்காணப்படாத செலவு ரூபா 4,105,591 ஆகக் காணப்பட்டது.

### 1.3.6 கட்டு நிதிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 25 தலைப்புகளுக்கு உரித்தான ரூபா 167,575,006 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத 35 கட்டுநிதி வரவு மீதிகளும்,

08 தலைப்புகளுக்கு உரித்தான ரூபா 9,711,072 தொகையான 12 செலவு மீதிகளும் காணப்பட்டன.

(ஆ) ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 4,349,991 தொகையான கட்டுநிதிக் கணக்கு மீதி கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு (ii) கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான அறிக்கையில் பூச்சியப் பெறுமதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.7 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிப் பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்படக்கூடியதாக இருந்த எனினும், அவ்வாறு செயற்பட்டிராத 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 17 அலுவலகங்களின் 454 வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 48,699,778 ஆகக் காணப்பட்டது.

(ஆ) ஊவா மாகாண சபைச் செயலகத்தின் சபை மண்டபத்திற்காக புதிதாக மும்மொழி கொள்கையை அமுற்படுத்துவதற்காக சொற்களஞ்சிய முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சால் 2011 நவம்பர் 14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகை அந் நிகழ்ச்சித்திட்டம் செயற்பட்டிராமையால் கணக்காய்வுத் தினமாகிய 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையும் செயற்பாடற்று பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2009 முன்கொண்டுவரப்பட்ட செயற்திட்டத்திற்காக 2010 பிரதம செயலாளரால் பெறப்பட்டிருந்த ரூபா 14,005,961 இலிருந்து ரூபா 4,508,739 தொகையும், இளைஞர் நடனக் குழு மேற்கொண்ட அரங்கேற்றத்திற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த ஞாபகார்த்தச் சின்ன வருமானமான ரூபா 37,500 தொகையும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ஊவா மாகாண பிரதம அமைச்சர், நிதி, திட்டமிடல், சட்ட மற்றும் சமாதான உள்ளூராட்சி, கல்வி, போக்குவரத்து, கலாசார அலுவல்கள், காணி, நீர்ப்பாசன, பொருளாதார அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும்

நிர்மாணிப்பு அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது.

(ஈ) பிபில வலயக் கல்வி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 725,000 கூட்டுத்தொகையான மாணவர்களுக்கான உதவுதொகை பெறும் மாணவர்களுக்கு வழங்காது 1 - 3 இற்கு இடைப்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது.

### 1.3.8 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்கப்படாதிருந்ததுடன், அவ் ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 168,064,289 ஆக இருந்தது.

**(ஆ) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 56,545,090 கூட்டுத்தொகையான 442 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.9 இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (i) | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | |
| | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | ஊவா மாகாண நூலக சேவைச் சபையில் தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த 03 உத்தியோகத்தர்களில் 2010 |

| | |
|---|---|
| | சனவரி முதல் 2011 செப்தெம்பர் வரை ஊழியர் சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய 8 சதவீதப் பங்களிப்புத் தொகையான ரூபா 29,244 தொகை சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டிராததுடன் 12 சதவீதமான நிறுவகத்தின் பங்களிப்புத் தொகையான ரூபா 43,866 தொகையுடன் செலுத்தப்பட வேண்டிய ரூபா 73,110 தொகையும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | ஊவா மாகாண நூலகச் சேவைச் சபையின் தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 03 உத்தியோகத்தர்களுக்காக 2010 சனவரி முதல் 2011 செப்தெம்பர் வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய 3 சதவீதப் பங்களிப்புத் தொகையான ரூபா 10,966 செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 2000 இன் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் இல. 33(1) ஆம் பந்தி | அளவீட்டு ஆணையாளர் நாயகத்தின் பீ/பீடீஎல்/2009/174 ஆம் இலக்க மற்றும் 2010 யூன் 15 ஆம் திகதிய திட்டத்தில் துண்டு இல. “ஏ” ஆகக் காண்பிக்கப்பட்ட 1.0118 ஹெக்டேயர் அளவிலான மகுல் லியத்த எனும் பெயரிலான காணியின் உரித்து 1950 இன் 09 ஆம் இலக்க காணி கையேற்றல் அதிகாரச்சட்டத்தின் 38(அ) உப ஏற்பாட்டின் பிரகாரம் 2011 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2011 பெப்ரவரி 14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பதுளை பிரதேசச் செயலாளரால் ப/விகாரமகாதேவி மகளிர் மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டிருந்த காணியின் பெறுமதி பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. 2000 இன் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்தி |

| | |
|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 33(1) ஆம் பந்தியின் பிரகாரம் விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் எழுத்து மூல அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் (viii) உப பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட துணை நியதிச்சட்டம் | ஒகிய களப் பயிற்சி நிலையத்தின் நிர்மாணிப்புக் கட்டிடத் திட்டம் 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபை உப நியதிச்சட்டத்தின் 08 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள நியதிகளிற்கு இணங்கும் வகையில் வெலிமட பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் VI ஆம் அத்தியாயம் | 2011 பெப்ரவரி 18 ஆம் திகதி மாவட்ட இயந்திர அலுவலகத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட எக்ஸ்கவேட்டருக்கும் பெக்கோ இயந்திரத்திற்கும் பதிவுச் சான்றிதழும் காப்புறுதிக் காப்பும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| ஊவா மாகாண கல்விக் கட்டளைச் சட்டத்தின் 10(VI) ஆம் உப பந்தி | கல்வி ஆலோசகர் சபையின் ஆலோசனையைப் பெறாது வெல்லவாய வலயக் கல்வி அலுவலகத்திற்கு உரித்தான மொ/மீதெனிய ஆரம்பப் பாடசாலை 2010 நவம்பர் 01 ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்தது. |

(ii) தாபன விதிக்கோவை

-----------------------------------

| | |
|---|---|
| XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பந்தி | மாகாண சபையின் 07 அமைச்சு/ திணைக்களங்கள்/ அலுவலகங்களிடமிருந்து 40 சதவீத ஆகக் குறைந்த அறவீட்டு எல்லை மீறப்பட்டு 25 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,061,612 தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 65(4) (i) மற்றும் ஊவா மாகாண சபை நிதி விதிக் கோவையின் 65(4) (i) | 736-8-3-1905 (ஏனைய) செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த மீண்டெழும் தேறிய ஏற்பாட்டில் 93.18 ஆன ரூபா 174,086,000 இல் ஏற்கப்படக்கூடிய செலவினம் தொடர்பான வகைப்படுத்தல் வருடாந்தம் நிதிக்கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அச் செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் தலைப்பு இல. 701 சபை செயலாளர் அலுவலகத்திற்காக ரூபா 3,284,800 தொகையும் தலைப்பு இல. 705 விளையாட்டு அமைச்சிற்காக ரூபா 3,684,500 தொகையுமாக ரூபா 6,661,000 கூட்டுத்தொகையான தொகை அச் செலவினத் தலைப்புகளின் மீண்டெழும் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. |
| | 511.1 | ஊவா மாகாண அச்சக முற்பணக் கணக்கிலான ரூபா 2,217,738 தொகைக்கும், கலைனயமான கைத்தொழில் முற்பணக் கணக்கிற்கும் இடையே ரூபா 119,583 தொகையும் கைத்தொழில் முற்பணக் கணக்கின் ரூபா 1,955,059 உமான மீண்டெழும் நட்டத்தை ஏற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | 880 | ஊவா மாகாண நூலக சேவைச் சபைக்குரித்தான உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிபில வலயக் கல்வி அலுவலகத்தில் பிணை வைக்க வேண்டிய இரு உத்தியோகத்தர்ளிடமிருந்து பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |

**(iv) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 1996 மார்ச் 15 ஆம் திகதிய 1996/08 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | தேவையான பிணை பெறப்படாது 10 ஆண்டுகளிலும் குறைவான மாகாண வருமானத் திணைக்களத்தின் இரு உத்தியோகத்தர்களுக்கு |

ரூபா 328,000 தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது.

**(v) ஏனைய சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2007 சனவரி 04 ஆம் திகதிய 01/2007 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினதும் விதவைகள்/தபுதாரர் அனாதைகள் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினதும் சுற்றறிக்கையின் 2:2 ஆம் பந்தி | வெல்லவாய வலயக் கல்வி அலுவலகத்தால் 2005, 2006 ஆம் ஆண்டுகளுக்காக மாகாண அரச உத்தியோகத்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பங்களிப்புத் தொகையான ரூபா 19,934,603 வும், பண்டாரவளை வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தால் 2004 முதல் 2007 வரையான பங்களிப்பு ஓய்வூதிய சம்பளத்திற்காக அறவிடப்பட்ட பங்களிப்புத் தொகையான ரூபா 866,055 தொகையுமான ரூபா 20,800,658 கூட்டுத்தொகையான விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படாது 2011 திசெம்பர் 11 வரை பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |
| 2008 மார்ச் 05 ஆம் திகதிய டீஎம்எஸ்/சீ/01/பீஏஎச்ஏ/15 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2007 இன் படி ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் மீள சேவையில் அமர்த்தப்படுகையில் விடுமுறை தினக் கொடுப்பனவு வழங்கப்படுகையில் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பதவியின் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ளாது 75 நாட்களுக்கு ரூபா 60,496 தொகை கூட்டுறவு ஆணையாளருக்கு விடுமுறை தினக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. |
| 2/2008 ஆம் இலக்க ஊவா மாகாண பிரதம செயலாளரின் உள்ளகச் சுற்றறிக்கையின் 7 | திணைக்களத்தால் இரு வாகனங்கள் பயணிக்கும் மைல்களின் எண்ணிக்கையும் எரிபொருள் அளவின் பயன்பாடும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

ஆம் பந்தி

| | |
|---|---|
| 2011 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 9/சங்/4 ஆம் இலக்க பிரதம அமைச்சுக் கணக்காளரின் கடிதம் | ஊவா மாகாண நூலக சேவைச் சபையால் நூலகக் கேட்போர்கூடம் ஒதுக்கப்படுகையில் 02 சந்தர்ப்பங்களின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 23,000 தொகையான 50 சதவீத முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 2009 ஏப்ரல் 07 ஆம் திகதிய 10/4/1 ஆம் இலக்க மற்றும் 2009 யூலை 08 ஆம் திகதிய ஊவா மாகாண பிரதம செயலாளரின் கடிதம் | ஒகிய களப் பயிற்சி நிலையம் நிர்மாணிக்கப்படும் காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அக் காணி சுற்றுலா விடுதிக்காக மிகவும் உகந்தது எனும் பரிந்துரைக்கு முரணாக அக் காணியில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |

(vi) கல்வி அமைச்சுச் சுற்றறிக்கை

---

| | |
|---|---|
| (அ) கல்வி அமைச்சின் 2004 ஏப்ரல் 21 ஆம் திகதிய 2000/ 36 (1) ஆம் இலக்க சுற்றறிக்கை | வெல்லவாய கல்வி வலயத்தின் மாகாண சபை 02 பாடசாலைகளுக்கு ரூபா 40,966 தொகையான தொலைபேசிப் பட்டியல்கள் வெல்லவாய வலய அலுவலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) பாடசாலை அபிவிருத்தி சங்க நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட 1982 மார்ச் 30 ஆம் திகதிய 1982/2, 1985 ஒக்டோபர் 21 ஆம் திகதிய 4/மு/06/213, 2001 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 2001/24 ஆம் இலக்க 2008 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 35/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட முக்கிய ஏற்பாடுகள் பதுளை மாவட்டத்தின் 02 பாடசாலைகளால் பின்பற்றப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

- பாடசாலை அபிவிருத்தி சங்கக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிராமை
- அங்கத்துவ பெயர்ப் பதிவேடு மற்றும் பற்றுச்சீட்டுக்கள்

பேணப்பட்டிருக்கவில்லை.

- வருடாந்த கணக்குப் பரிசீலனை நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.
- வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
- கணக்குகளில் இருந்து முறையற்ற விதத்தில் பணம் பெறப்பட்டிருந்தது.
- புதிய மாணவர்கள் ஆட்சேர்க்கப்படுகையில் பணம் பெறப்படல்

**(vii) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண விவசாய, விவசாயிகள் அபிவிருத்தி, விலங்கின உற்பத்தி, நன்னீர் மீன்பிடித்துறை, சுற்றாடல் மற்றும் சுற்றுலா நடவடிக்கைகள் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 42,856 தொகையும், மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், நுகர்வோர் அலுவல்கள் மற்றும் கூட்டுறவு மற்றும் உணவு வழங்கல் மற்றும் விநியோக அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 88,188 தொகையும் உழைக்கும் போதே வருமான வரிக்காக அறவிடப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 இன் 14 ஆம் திகதிய பெறுமதி சேர் வரி திருத்தல் அதிகாரச்சட்டத்தின் 26 ‘அ’ பந்தியின் பிரகாரம் தியதலாவ ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவிற்காக மத்திய நிலை வாயு குளிரூட்டல் முறைமையை வழங்குவதற்காக 2009 மார்ச் 18 ஆம் திகதி இலங்கை மின்சார சபைக்கு ரூபா 6,077,029 தொகை செலுத்தப்படுகையில் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித்தொகையான ரூபா 911,554 இல் ரூபா 303,851 தொகை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2010 செப்தெம்பர் 30 ஆம் திகதிய எஸ்டீ/ஐஎன்எப்/2010/03 ஆம் இலக்க முத்திரை வரி அறவீடுகள் தொடர்பாக சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட மதுபான விற்பனை அனுமதிப்பத்திரத்திற்காக முத்திரை வரி மற்றும் அவ்வாறு அறவிடப்படாத அனுமதிப்பத்திரத்திற்காக 2011 ஆம்

ஆண்டின் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகையில் நிலுவைப் பணத்துடன் முத்திரை வரித் தொகையான ரூபா 1,100,000 ஹாலிஎல பிரதேச செயலகத்தினாலும் ரூபா 1,840,000 தொகை பன்டாரவளை பிரதேச செயலகத்தாலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய காணி இல. 96/09 காணி ஆணையாளர் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கையின் பிரகாரம் 07 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வரி மற்றும் தண்டப்பணம் ரூபா 3,062 பஸ்ஸர பிரதேச செயலகத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சுகாதார சேவைகள் திணைக்களத்தால் உலக வங்கி உதவியின் கீழ் பெறப்பட்டிருந்த விசேட நிதியத்தில் இருந்து ரூபா 293,514 தொகை உள்நாட்டு வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கல்விப் பிரிவு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காகப் பெறப்பட்ட மானியங்களில் ரூபா 3,131,936 தொகை 16 சந்தர்ப்பங்களின் போது பெறுமதி சேர் வரியாக ரூபா 100,827 தொகை 07 சந்தர்ப்பங்களின் போது பிடித்துவைத்தல் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் ரூபா 8,289,893,535 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,966,721,900 ஆக இருந்தது. இதன் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 323,171,635 ஆல் அதிகரித்திருந்தது.

## 2.2 வருமானமும் செலவினமும்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான, செலவினம் மற்றும் முரண்கள் தொடர்பான பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளன.

**வருமானம்**

| மாகாணசபை விடயங்களுக்குரிய வருமானம் | 2011 பாதீடு செய்யப் பட்டவை | 2011 உள்ளபடி யானவை | 2011 முரண் | 2010 பாதீடு செய்யப் பட்டவை | 2010 உள்ளபடி யானவை | 2010 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 827,326,000 | 1,503,998,803 | 676,672,803 | 885,925,000 | 888,455,480 | 2,530,480 |
| வரியல்லாத வருமானம் | 408,674,000 | 303,608,456 | (105,065,544) | 204,075,000 | 225,031,695 | 20,956,695 |
| அரசாங்க மானியம் | 10,347,000,000 | 10,404,988,682 | 57,988,682 | 9,032,235,000 | 8,300,000,000 | (732,235,000) |
| | 11,583,000,000 | 12,212,595,941 | 629,595,941 | 10,122,235,000 | 9,413,487,175 | (708,747,825) |

**செலவினம்**

| | 2011 | | | 2010 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதீடு செய்யப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 8,380,903,944 | 8,271,032,237 | 109,871,707 | 7,701,088,542 | 7,619,882,677 | 81,205,865 |
| ஏனையவை | 2,462,730,607 | 1,826,468,557 | 636,262,050 | 2,556,949,000 | 1,460,326,399 | 1,096,622,601 |
| உப மொத்தம் | 10,843,634,551 | 10,097,500,794 | 746,133,757 | 10,258,037,452 | 9,080,209,076 | 1,177,828,466 |
| மூலதனச் செலவினம் | 3,627,634,865 | 1,613,713,379 | 2,013,921,486 | 4,815,615,000 | 2,175,338,519 | 2,640,276,481 |
| | 14,471,269,416 | 11,711,214,173 | 2,760,055,243 | 15,073,652,542 | 11,255,547,595 | 3,818,104,947 |

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 11,711,214,173 ஆக இருந்தது. அதில் 86.2 சதவீதம் மீண்டுவருஞ் செலவினமாக இருந்ததுடன் 13.8 சதவீதம் மூலதனச் செலவினமாகும்.

## 2.3 வருமான நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஊவா மாகாண நிதிய விதிக் கோவையின் கட்டளை இல. 151.1 இன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானத்துடன் வருமான மிகைக்கோ அல்லது பற்றாக்குறைக்குக் காரணம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானத்திற்கும் உள்ளபடியான வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானத்திற்கும் இடையே ரூபா 571,607,620 தொகையான சாதகமான முரண்கள் காணப்பட்டமையால் வருமான மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்காக ஈடுபடுத்தப்பட்ட தகவல்கள் போதியளவிலும், நம்பகரமான முறையிலும் நாளதுவரையாகவும் மேலும் துல்லியமானவையெனவும் கணக்காய்வின் போது திருப்திப்படுத்த முடியாதிருந்தது.

(இ) ஊவா மாகாண சபையின் மீளாய்வாண்டின் போது 18 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட அளவிற்கும் உள்ளபடியாக சேகரிக்கப்பட்ட அளவிற்கும் இடையே 53 சதவீதத்திலிருந்து 1424 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டன.

(ஈ) ஊவா மாகாண சபையின் 13 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமான அளவும் 66 சதவீதத்திலிருந்து 819 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டன.

## 2.4 நிதி ஏற்பாட்டு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 20 தலைப்புக்களின் 96 செலவின விடயங்களின் கீழான ரூபா 7,666,000 தொகையான தேறிய ஏற்பாடு முற்றாக எஞ்சியிருந்தது.

(ஆ) தலைப்பு இல. 703 ஊவா மாகாண கூட்டுறவு சேவை ஆணைக்குழுவால் 03 செலவின விடயங்களுக்காக கோரப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தொகைக்கும் மேலாக மேலதிகமாக வழங்கப்பட்ட ரூபா 330,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது எஞ்சியிருந்தது.

(இ) பண்டாரவெல கல்வி வலயத்தின் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தப்பட்ட பணத்தில் 123 பாடசாலைகளால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,449,514 தொகையும், வெல்லவாய கல்வி வலயத்தின் 84 பாடசாலைகளால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,193,636 தொகையும் செலவிடப்படாது எஞ்சியிருந்தது.

(ஈ) பழைய வாகனங்களைப் பழுதுபார்த்தலுக்காக பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் 2011 நவம்பர் 29 ஆம் திகதி பெறப்பட்ட ரூபா 1,565,859 தொகையில் ரூபா 1,105,286 தொகை செலவிடப்படாது மீள அனுப்பப்பட்டிருந்தமையால் வழங்கப்பட்ட தொகையில் உரிய செயற்பாடு குறித்த வகையில் மேற்கொள்ளப்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக 10 தலைப்புகளின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 45 செலவின விடயங்களின் கீழ் ரூபா 29,561,197 தொகையான ஏற்பாட்டிற்கு மேலாக பொறுப்புகளுக்கு பகிரப்பட்டிருந்தது.

## 2.5 அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டிலும் கூடிய செலவினத்தை ஏற்றல்

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 69 ஆம் நியதி மற்றும் ஊவா மாகாண சபை நிதி விதி 32 என்பவற்றில் காணப்படும் நியதிகளுக்கு முரணாக இளைஞர் அலுவல்கள், விளையாட்டு, சமூக நலன்புரி, தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் வலு சக்தி மற்றும் கைத்தொழில், சிறு கைத்தொழில் அமைச்சால் 17 செலவின விடயங்களுக்காக ரூபா 2,927,520 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

## 2.6 முற்பணக் கணக்குகளின் வரம்புகளைக் கடைப்பிடிக்காமை

இலங்கைக் குடியரசு நிதிப் பிரமாணம் 503 மற்றும் ஊவா மாகாண சபை நிதி விதி 369 இல் குறிப்பிடப்படும் நியதிகளுக்கு முரணாக 06 முற்பணக் கணக்கு விடயங்களின் செலவினங்களின் உச்ச எல்லை ரூபா 17,221,798 ஆலும் 11 விடயங்களின் வரவு மீதியின் உச்சஎல்லை ரூபா 10,357,250 இனாலும் மிகைத்திருந்ததுடன் 04 விடயங்களின் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 13,319,069 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 2.7 தொழிற்பாட்டு நட்டம்

03 வர்த்தக முற்பணக் கணக்குகளில் முன்னைய 03 வருடங்களின் போதும் தொடர்ச்சியாக தொழிட்பாட்டு நட்டமேற்பட்டிருந்திருந்தமை அறிக்கையிடப் பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 513 இன் ஏற்பாடுகளின் படி, மேற்குறித்த நட்டத்தை ஈடுசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், முற்பணக் கணக்குகள் நட்டத்துடன் செயற்படுத்துவதனால் ஏற்படும் பொருளாதார மற்றும் சமூக நியாயத்தன்மை தொடர்பாக முகாமையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மனித வள முகாமைத்துவம்

### 2.8.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள், நிறுவனம் - பாடசாலை பதவியணியினர் தவிர

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடி யான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் நிலை | 798 | 743 | 55 | - |
| மூன்றாம் நிலை | 1,396 | 1,036 | 360 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| இரண்டாம் நிலை | 19,619 | 19,979 | - | 360 |
| ஆரம்ப நிலை | 3,441 | 3,875 | - | 434 |
| ஏனையவை(அமைய, தற்காலிகமானவை) | 14 | 1,491 | - | 1,477 |

(ஆ) பாடசாலை பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| அதிபர்கள் | 1,011 | 407 | 604 |
| ஆசிரியர்கள் | 16,320 | 15,904 | 416 |
| சிற்றூழியர்கள் | 1,250 | 1,224 | 26 |

### 2.8.2 பதவியணியினரை நியமித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஒக்டோபர் 10 ஆம் திகதிய சீஎஸ்ஏ/6/6/10/5 ஆம் இலக்க கௌரவ ஆளுனர்களுக்கு விலாசமிடப்பட்ட சனாதிபதி செயலாளரால் விநியோகிக்கப்பட்டிருந்த ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் மீள மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயற்பாட்டு நடைமுறை விதி தொடர்பாக உள்ள விசேட வர்த்தமானியின் 177 ஆம் பந்திக்கு முரணானதாகும்.

(i) இலங்கை கணக்காளர் சேவையில் I ஆம் தரத்தில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் 2012 திசெம்பர் 31 வரை ஒரு வருடத்திற்கு 04 நிறுவனங்களில் கணக்காளர் பதவிகளில் கடமையாற்றல்.

(ii) இலங்கை நிர்வாக சேவையில் I ஆம் தரத்தில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் ஆளுனரின் செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்காக 2011 யூன் 10 ஆம் திகதி முதல் 2012 யூன் 09 ஆம் திகதி வரை ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலும் 2011 யூன் 10 ஆம் திகதி முதல் ஊவா முகாமைத்துவப்

பயிற்சி நிறுவகத்தில் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கும் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு யூன் 30 வரை 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக தொடர்ந்து சம்பளமற்ற லீவைப் பெற்றுள்ள ஒக்கம்பிடிய நாற்றுப் பண்ணையில் ஊழியர் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.8.3 முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனிதவளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிபில வலயத்திற்கு உரித்தான 03 பாடசாலைகளுக்கு 2010 யூலை 01 ஆம் திகதி முதல் நியமனம் பெற்ற பாடசாலை சிற்றூழியரும் பாடசாலை நூலக ஊழியர்கள் இருவர் அம் மாதத்தின் போது ஊவா மாகாண பிரதம அமைச்சர் அலுவலகத்தில் ஈடுபடுத்தப்பட்டு 2011 நவம்பர் மாதம் வரை அவர்கள் மூவருக்கும் சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ரூபா 879,260 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மொ/குடாஓய வித்தியாலயத்தின் நூலக ஊழியர் ஒருவர் 2011 ஒக்டோபர் 03 ஆம் திகதி முதல் ஊவா மாகாண பிரதம அமைச்சின் மத்திய பிரிவிற்கும் மொ/வெ/ஹம்பேகமுவ மகாவித்தியாலயத்தில் கடமைபுரிந்த நூலக ஊழியர் ஒருவர் 2010 ஆகஸ்ட் 05 ஆம் திகதி முதல் ஊவா மாகாண பிரதம அமைச்சு அலுவலகத்திற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர் ஈடுபடுத்தப்பட்ட நாள் முதல் 2011 நவம்பர் வரை வலய அலுவலகத்திற்கோ அல்லது உரிய பாடசாலைகளில் கடமையாற்றாது ரூபா 298,962 கூட்டுத்தொகையான சம்பளமும் படிப்பணமும் வலய அலுவலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மொ/கொடிகமுவ மஹா வித்தியாலயத்தில் கடமைபுரிந்த அதிபர் 2 – 11 ஆம் தரத்தில் உத்தியோகத்தர் 2010 யூன் 03 ஆம் திகதி பிபில வலயக் கல்வி அலுவலகத்திற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அன்றிலிருந்து 2011 ஒக்டோபர் வரை எவ்வித உத்தியோகபூர்வக் கடமை ஒப்படைப்போ அல்லது கடமை மேற்கொள்ளலோ இன்றி சம்பளங்கள் மற்றும்

படிப்பணமாக ரூபா 559,087 செலுத்தப்பட்டிருந்தது. அவர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு ஈடுபடுத்தப்படுகையில் அவரிடம் உள்ள அரசாங்கப் பொருட்கள் முறையான வகையில் பாடசாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.8.4 ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபை நிதி விதியின் 71.1 ஆம் இலக்க நிதி விதியின் பிரகாரம் பதவிகளை உருவாக்குதல் மற்றும் சம்பள அளவுத்திட்டம் மற்றும் ஊதியங்கள் மற்றும் படிப்பணங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றிற்காக பிரதம செயலாளரின் முன்னங்கீகாரம் பெறப்படாது ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையால் 2012 சனவரி 11 ஆம் திகதி 108 நிரந்தர உத்தியோகத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் 14 ஊழியர்களும் நாளாந்த சம்பளம் பெறும் 04 ஊழியர்களும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். இதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டமும் இருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் கட்டளைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் 7(ஆ) பந்திக்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் அல்லாத ஒருவர் 2011 செப்தெம்பர் மாதம் முதல் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

(இ) ஊவா மாகாண நூலக சேவை சபைக்காக முறையாக பதவியணியை அங்கீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது மூன்று உத்தியோகத்தர்களும் நான்கு ஊழியர்களும் கல்வித் திணைக்களத்திலிருந்தும் பதுளை மாநகர சபையிலிருந்தும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இரு உத்தியோத்தர்களும் பத்து ஊழியர்களும் முழுநேர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) வெற்றிடங்கள் நிலவும் நூலகர் பதவியை நிரப்பாது அப் பதவியில் சகல உத்தியோகபூர்வ நடவடிக்கைகளும் மேற்குறித்த ஒப்பந்த அடிப்படையில்

ஆட்சேர்க்கப்பட்டு தற்காலிக நூலக ஊழியர் தரப்பிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(உ) ஊவா மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளரின் கீழ் ஊவா மாகாண நூலக சேவை சபையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கணனி நூலகத்தின் ''தெனுமே சவியென் நொசெலி திரியென்'' எனும் கருப்பொருளில் நிதி அறவீட்டில் பேணப்பட்டு வரும் 04 கணனி பாடநெறிகளில் சகல கற்பித்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட தற்காலிக உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அப் பதவிக்காக இருக்க வேண்டிய கல்வி தகமைகள் தொழிற்திறன் தகமைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அப் பாடநெறிகளின் தரம் தொடர்பான நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஊவா ஜனகலா கேந்திர நிலைய அதிபதியாக இருந்த உத்தியோகத்தராக இருந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்று கணக்காய்வுத் திகதியில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்தும் இதற்காக நிலைய அதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. ஓய்வுபெற்ற உத்தியோகத்தரால் அவரின் பொறுப்பில் இருந்த சங்கீத, நடன மற்றும் ஏனைய உபகரணங்களும் நிறுவகத்திற்கு உரித்தான திறப்புகள் ஆகியவையும் கணக்காய்வுத் தினமாகிய 2012 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையிலும் முறையான பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 1989 ஆகஸ்ட் 14 ஆம் திகதி நியமனம் பெற்ற மொ/கரகஹவெல பாடசாலையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 22 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்துடன் ஆசிரியர் ஒருவருக்கு தனியாள் கோவையொன்று இல்லாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளப் பரிமாற்றம் மேற்கொள்ளாது சம்பள ஏற்றம் இல்லாது 2011 ஒக்டோபர் இல் உள்ளவாறும் ரூபா 2,840 தொகையான குறைந்த சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) பிபில கல்வி வலயத்தில் 1972 ஒக்டோபர் 05 ஆம் திகதி முதல் 2011 மே 24 ஆம் திகதி வரை நியமனம் பெற்ற 55 ஆசிரியர்களின் கல்வி பெறுபேறுகள் 2011 நவம்பர் வரையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பிபில வலயக் கல்வி அலுவலகத்தில் 1996 முதல் 2009 சனவரி 01 வரையான காலப்பகுதியின் போது உதவிப் பாதுகாவலர், உதவி ஊழியர், பாடசாலை ஆய்வு கூட ஊழியர் மற்றும் சமையற்காரர் எனும் பதவிகளுக்காக முறையான நியமனக் கடிதங்கள் இன்றி 21 ஊழியர்கள் கடமையாற்றியிருந்தனர்.

(ஒ) 2004 பெப்ரவரி 04 ஆம் திகதி சங்கீத டிப்ளோமா நியமனம் பெற்ற ஒரு ஆசிரியர் சமர்ப்பித்திருந்த கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகள், பரீட்சைத் திணைக்களப் பதிவேடுகளுடன் இணங்காததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2004 பெப்ரவரி 09 ஆம் திகதி முதல் 2005 செப்தெம்பர் 12 ஆம் திகதி வரை பிபில வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து ரூபா 80,897 தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. 2005 செப்தெம்பர் 12 இன் பின்னர் பதுளை கல்வி வலயத்தின் கொஸ்கொல்ல பாடசாலையில் கடமையாற்றிவரும் இவ் ஆசிரியரின் தனியாள் கோவை 2011 நவம்பர் வரையிலும் பிபில கல்வி வலய அலுவலகத்தில் காணப்பட்டது.

(ஓ) 1984 திசெம்பர் 02 ஆம் திகதி பிபில வலயத்தில் நியமனம் பெற்ற ஒரு ஆசிரியர் தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சம்பள நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஔ) வெல்லவாய வலயக் கல்வி அலுவலகத்தின் விடயத்திற்குப் பொறுப்பான உதவிக் கல்வி பணிப்பாளர் பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்கு அதிபர் சேவையிலும் ஆசிரியர் சேவையிலும் 10 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு உத்தியோகத்தரின் பதில் கடமையாற்றும் காலம் 18 ஆண்டுகளானதுடன் 09 சக ஊழியர்களின் பதில் கடமைக் காலம் 04 ஆண்டுகள் முதல் 11 வரையாக இருந்தது.

(க) தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் II – I இன் பிரகாரம், வெல்லவாய வலயக் கல்வி அலுவலகத்தில் நன்னடத்தைக் காலம் கடந்த சேவைக் காலம் 04 – 36 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 94 ஆசிரியர்களும் பண்டாரவளை கல்வி வலயத்தில் கடமையாற்றும் 96 உத்தியோகத்தர்களும் மற்றும் 113 ஊழியர்களும் கணக்காய்வுத் திகதி வரையிலும் நிரந்தரமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.8.5 நீண்டகாலமாக ஒரே இடத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 செப்தெம்பர் மாதமளவில் ப/ விகாரமாதேவி மகளிர் பாடசாலையில் 08 ஆண்டுகளுக்கு மேலான காலமாக கடமையாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.

(ஆ) பிபில கல்வி வலயத்தில் 23 பாடசாலைகளில் அதிபர்கள் ஒரே பாடசாலையில் 08 ஆண்டுகள் முதல் 19 ஆண்டுகள் வரையான காலமாக கடமையாற்றியிருந்தனர்.

(இ) வெல்லவாய வலயக் கல்வி அலுவலகத்திலும் வலயத்திற்கு உரித்தான பாடசாலைகளில் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்து 08 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலமாக கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 04 ஆகவும் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையான காலமாக கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 29 ஆகவும் 20 ஆண்டுகளுக்கு மேலான சேவைக்காலத்தைக் கொண்ட 09 உத்தியோகத்தர்களும் காணப்பட்டனர்.

(ஈ) வருடாந்த இடமாற்றக் கொள்கைகளுக்கு முரணாக 2011 நவம்பர் 11

இல் உள்ளவாறும் பண்டாரவளை வலய அலுவலகத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 05 உம், 06 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 07 உமாகும்.

## 2.9 சொத்து முகாமைத்துவம்

### 2.9.1 விளைவற்றதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாமலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்தின் தன்மை | எண்ணிக்கை/ வகை/பரப்பளவு | பெறுமதி | விளைவற்றிருந்த காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| வாகனங்கள் | 02 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 01 ஆண்டு |
| | 03 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 05 ஆண்டுகள் |
| | 01 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 15 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 01 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 01 ஆண்டு |
| | 04 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 02 ஆண்டுகள் |
| | 02 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 04 ஆண்டுகள் |
| ஏனையவை | 3,322 | 2,407,210 | |

---------------------

2,407,210

===========

## 2.9.2 பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாத சொத்துக்கள்

03 மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ அலுவலகங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,291,297 ஆன 58 சொத்து அலகுகள் நிதிப் பிரமாணம் மற்றும் மாகாண சபை நிதிப் பிரமாண கட்டளை 751.1 இன் பிரகாரம் பொருட் பதிவுப் பதிவேடுகளிலும் இருப்புப் பதிவேடுகளிலும் பதியப்பட்டிருக்கவில்லை.

## 2.9.3 நடைமுறையற்ற சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்படாத சொத்துக்கள்

மாகாண சபையின் 10 அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ அலுவலகங்களின் கூட்டுத்தொகை ரூபா 26,684,746 தொகையான சொத்துக்கள் 985 அலகுகள் ஒதுக்கீட்டுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மாகாண சபையின் 06 அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ அலுவலகங்களினதும் 153 பாடசாலைகளினதும் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 இன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9.5 களஞ்சிய முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இளைஞர் நடவடிக்கைகள், விளையாட்டுக்கள், சமூக நலன்புரி, தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மின்சார மற்றும் வலு மற்றும் கைத்தொழில் துறை, சிறு கைத்தொழில் அமைச்சால் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதற்காக 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,531,298 பெறுமதியான விளையாட்டுப் பொருட்களும் பெறுமதி கணிப்பிடப்பட முடியாத 459 விளையாட்டு உபகரணங்களும் கணக்காய்வுத் தினமாகிய 2012 ஏப்ரல் 23 ஆம் திகதி வரையிலும் நலன்பெறுனர்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 பெப்ரவரி 08 ஆம் திகதியில் உள்ளவாறு கினிகம களஞ்சியத்தில் பௌதீக மீதியில் உள்ள பொருட்கள் புத்தக மீதியுடன் உள்ள பொருட்களுடன் 17 வகையான பொருட்களுக்குரிய 162 உபகரணங்களின் பற்றாக்குறையும் 11 வகையான பொருட்களுக்குரிய 151 உபகரணங்களன் மிகையும் காணப்பட்டன.

(இ) பண்டாரவளை வலய கல்வி அலுவலகத்தின் இருப்புப் பதிவேட்டில் காணப்பட்ட மீதிக்கும் 2012 பெப்ரவரி 08 ஆம் திகதில் உள்ளவாறான இருப்பு மீதிக்கும் இடையே 19 வகையான பொருட்களுக்குரிய 1633 உபகரணங்களின் பற்றாக்குறையும் 14 வகையான பொருட்களுக்குரிய 206 உபகரணங்களன் மிகையும் காணப்பட்டன.

(ஈ) மொனறாகலை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தால் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 18 பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(உ) வருமான ஆணையாளர் திணைக்களத்தில் 2011 இன் பொருள் மெய்மையாய்வில் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 25,525 தொகையான சொத்துக்கள் நடைமுறையற்ற சொத்துக்கள் அசைவு பற்றிய அறிக்கைக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு உரித்தான முன்னாள் தலைவரால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் 2011 ஆகஸ்ட்

மாதம் அவர் பதவியிலிருந்து விலகிச் சென்ற போது மீள ஒப்படைத்திருக்கவில்லை.

(எ) ஊவா மாகாண நூலக சேவைச் சபைக்குரித்தான பொருட்களின் இருப்பும் பதிவுப் பொருட்களும் 2011 ஒக்டோபர் 07 ஆம் திகதி பரிசீலிக்கையில் இதற்குரித்தான 20 பிளாஸ்டிக் கதிரைகளும் கெனன் வகையிலான 01 பூஸ்டரும் 10 X 15 அடி கூடார துணிகள் 03 இனது பற்றாக்குறையும் காணப்பட்டது.

(ஏ) ஊவா மாகாண மக்கள் கலாச்சார மையத்தின் பொருள் மெய்மையாய்வு தொடர்பாக 2012 பெப்ரவரி 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது மேல் நாட்டு அணிகளினதும், மேல்நாட்டு மேள அணிகலத் தொகுதிக்கும் பித்தளை கொம்பினது பற்றாக்குறையும், தவில் ஒன்றினதும், தம்மெட்டம் மற்றும் உடுக்கை மிகையும் காணப்பட்டன.

(ஐ) ஊவா மாகாண நூலக சேவைச் சபைக்குரித்தான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக 2003 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வு தொடர்பான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், நூலகத்திற்கு உரித்தான புத்தகங்கள் 2009 யூலை 19 ஆம் திகதி முதல் அதன் தலைமை நூலகராகக் கடமையாற்றிய உத்தியோகத்தருக்கு 2011 ஒக்டோபர் 13 ஆம் திகதி வரையிலும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9.6 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பண்டாரவளை வலய கல்வி அலுவலகத்திற்கு உரித்தான பண்டாரவளை பண்டாரவளை சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 6,450 தொகையான வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து இயந்திரங்கள் மற்றும் வாகன வாடகை, வாகன சேவைக் கட்டணங்கள், உழைப்புக் கட்டணமாக ரூபா 22,239,417 கூட்டுத்தொகையான வருமானம் ஊவா மாகாணத்தின் மாவட்ட இயந்திரப் பொறியியல் அலுவலகத்திற்கு கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்டது.

### 2.9.7 தீர்க்கப்படாத முற்பணங்கள்

மாகாண சபையின் 04 நிறுவனங்களால் பல்வேறு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 799,727 தொகையான முற்பணங்கள் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.9.8 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த 12 ஊழியர் கடன் முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 88,484,333 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,842,761 ஆக இருந்தது.

(ஆ) 2004 சனவரி 08 ஆம் திகதி ஊவா மாகாண தலைமை செயலாளரின் 2004/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குப் பொழிப்பினூடாக தீர்க்கப்பட வேண்டியிருந்த எனினும் தீர்க்கப்படாத 3,923 கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 69,194,021 ஆக இருந்ததுடன் இடமாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தர்களுக்காக தீர்க்கப்படாத 1,201 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 48,947,241 ஆகக் காணப்பட்டது.

(இ) சேவையை விட்டுச்சென்றுள்ள, வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த, மரணித்த மற்றும் இளைப்பாறிய 40 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 931,505 தொகையான கடன் மீதியினை தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2, 4.5 பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் அக்கடனை அறவிடுவதற்கு சட்டமா

அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊவா மாகாண சபையில் உறுப்பினர் பதவியை வகித்து, மரணித்த மூன்று உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 329,531 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. இக் கடன் மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 113 மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 369 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக 2011 யூலை 13 ஆம் திகதி யூவீ/பீடீ/பீ/2011/30 எம் ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.9.9 வாகனப் பாவனை

(அ) கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் மற்றும் ஊவா மாகாண சபை நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காண்பிக்கப்பட்டது.

| அமைச்சு/அலுவலகம் | வாகன இல. | விபத்து ஏற்பட்ட திகதி | நட்டப் பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | KD - 1936 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 232,588 |
| சபைச் செயலகம் | UPPB - 4413 | 2011 நவம்பர் 15 | 118,373 |
| இளைஞர் அலுவல்கள், விளையாட்டுக்கள், சமூக நலன்புரி தோட்ட உட்கட்டமைப்பு | UPKG 5849 | 2011 ஏப்ரல் 26 | 645,012 |

| | | | |
|---|---|---|---|
| அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் வலுசக்தி மற்றும் கைத்தொழில் | | | |
| சிறு கைத்தொழில் அமைச்சு | UPPB 8641 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 149,621 |

(ஆ) ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கு உரித்தான மோட்டார் வாகனம் ஒன்று 2010 ஆம் ஆண்டின் போது திடீர் விபத்திற்கு உட்பட்டதை அடுத்து புதுப்பிப்பதற்கு ரூபா 232,588 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி நட்டஈடாக ரூபா 173,085 தொகை மாத்திரமே பெறப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையாகிய ரூபா 59,503 தொகை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 இனங்கானப்பட்ட நட்டங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனை மற்றும் நிறுவனங்களில் பராமரிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள நட்டங்களும் சேதங்களும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(அ) ஊவா மாகாண வீதி மக்கட்போக்குவரத்து சேவை அதிகாரசபையின் மூன்று நேரப் பதிவாளர்களால் 2010 ஆம் ஆண்டின் போது பொறுப்பேற்கப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் 2011 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களின் போது பொறுப்பேற்கப்பட்ட 10 பற்றுச்சீட்டுப் புத்தகங்களின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானங்கள் 2012 சனவரி 03 இல் உள்ளவாறும் ஒப்படைக்கப்பட்டிராததுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 343 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஏப்ரல் 03 ஆம் திகதி வெளிநிறுவகங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஊவா மாகாண நூலக கேட்போர்கூடக் கட்டிடத்தில் மண்டப வசதிகள் அவர்களுக்கு வழங்கப்படாது இரத்துச் செய்யப்பட்டு வேறு தரப்பினருக்கு கட்டணம் அறவிடப்படாது வழங்கப்பட்ட காரணத்தால் அத் திகதியில் நூலக சேவை சபைக்கு ரூபா 15,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) ஊவா ஜனகலா கேந்திர நிலையத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 251,000 கூட்டுத்தொகையான 12 ஆடைத் தொகுதிகளும் 02 நடன உபகரணங்களினது பற்றாக்குறையும் காணப்பட்டது.

(ஈ) பண்டாரவளை பிரதேச செயலகத்தால் மரண உதவிச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 500 லீற்றர் நீர் தாங்கி ஒன்று பகிர்ந்தளித்தல் உறுதிப்படுத்தப்பட்டிராததுடன் அது அலுவலகத்திலும் இருக்கவில்லை.

(உ) ப/திஸ்ஸபுர பாடசாலை ஆசிரியரிடமிருந்து தங்கியிருந்த காலத்திற்கு உரிய ரூபா 39,668 தொகையான நிலுவை மின்பட்டியலை அறவிட்டிராததுடன் 2011 யூலை 12 ஆம் திகதியில் உள்ளவாறும் அவர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார்.

(ஊ) தேவைப்பாட்டைக் கருத்திற்கொள்ளாது ஒக்கம்பிட்டிய நாற்றுப் பண்ணையில் பயன்பாட்டிற்காக எடுக்கப்படும் ரூபா 238,475 பெறுமதியான விவசாய இரசாயன இருப்பு 2012 யூன் 07 இல் உள்ளவாறும் காலாவதியாகியிருந்தது.

(எ) 115 நாட்கள் சம்பளமற்ற லீவைப் பெற்றுச்சென்றிருந்த ஓர் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53,053 தொகைக்காக ரூபா 28,200 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஏ) 03 பிரதேசச் செயலகங்களுக்கு திரிபோச வழங்கப்படுகையில் வழங்கப்பட்ட அளவிற்கும் பெற்றுக்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அளவிற்கும் இடையே 360 பக்கட் திரிபோசவிற்கு ரூபா 38,244 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது.

(ஐ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 22(2) இன் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்ட மற்றும் பூர்த்தி வரி சீராக்கம்

இன்மையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2011 ஆம் ஆண்டின் போது பெறுமதி சேர் வரியாக ரூபா 451,930 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.11 மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஊவா மாகாண கல்வி அமைச்சில் கடமையாற்றிய உத்தியோகத்தரால், ஊவா மாகாண நூலக சேவை சபைக் கட்டிடத்தைப் பயன்படுத்தி ஒரு வாரத்திற்கு 03 நாட்களின் படி நடாத்தப்படும் தனியார் உப வகுப்புக்களுக்காக ஊவா மாகாண நூலக சேவை சபையினதோ அல்லது ஊவா மாகாண கல்வி அமைச்சினதோ எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போலிப் பெயர்களைப் பயன்படுத்தி தவறாகக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரித்து மொனறாகலை பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் பல வருட காலமாக ஏற்பட்ட நிதி மோசடியால் ஊவா மாகாண சபைக்கு ரூபா 4,537,640 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. இப் பெறுமதியில் தவறாக விதவைகள் அநாதைகள் நிதியத்திற்கு மிகையறவீடு, அக்ரஹார, கையொப்பக் கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 173,329 ஆகக் காணப்பட்டது. இதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1) மற்றும் (2) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கையோ அல்லது இறுதி அறிக்கை 2011 மே 31 இல் உள்ளவாறும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஏப்ரல் 25 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு முரணாக தவறாக சம்பளப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு 2011 யூலை 31 ஆம் திகதி வரை சம்பளங்கள் ரூபா 211,356 தொகையும், படிப்பணம் ரூபா 1,275 தொகையும், லீவு நாள் சம்பளங்கள் ரூபா 4,010 தொகையும் ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்கள நிர்வாக உத்தியோகத்தருக்கு பிபில வலயக் கல்வி

அலுவலகத்தில் கடமையாற்றிய காலத்தின் போது அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 06 சந்தர்ப்பங்களின் போது ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதான களஞ்சியத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,552,713 கூட்டுத்தொகையான பொருட்கள் களஞ்சியத்திற்கு வழங்கப்பட முன்னர் அவை குறித்த மாதிரிகளின் பிரகாரம் நல்ல நிலையில் களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெற்றமைக்கு தொழிநுட்ப குழு போலிச் சான்றிதழை வழங்கியிருந்தது.

(உ) 2011 மே மாதத்தின் போது பண்டாரவெல வலயக் கல்வி அலுவலகத்தால் உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு 02 அழகியல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டமைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போலி ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 39,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பதுளை, நைனா தீவு மற்றும் ரிதிமாலியத்த விவசாய விரிவுரையாளர் அலுவலகத்திற்கு 2010 சனவரி 04 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 17,170 பெறுமதியான தானியங்கள் அரைக்கும் இயந்திரம் ஒன்று காணாமற்போயிருந்தது.

## 2.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஊவா ஜனகலா கேந்திர நிலையத்திலுள்ள நடன உபகரணங்கள் மற்றும் ஆடை அணிகலன்களும் 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நடன உபகரணங்களும் ஆடை அணிகலன்களும் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது ஊவா மாகாண அரச நடனக்குழு ஸ்தாபிக்கப்படுவதற்காக ரூபா 2,035,610 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களும் ஆடை அணிகலன்களினதும் கொள்வனவுகள் தொடர்பாக தெரிவுப் பரிசீலனையின் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 07 விடயங்கள் தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட பதுளை நகர கூறுவிலைகளிலும் பார்க்க ரூபா 410 முதல் ரூபா 6,050 வரையான வீச்சில் அதிகரித்திருந்தது.

(ஆ) ஒரே ஆண்டின் போது 06 உபகரணங்களின் கூறுவிலைகள் 2011 நவம்பர் மாத கூறுவிலைகளும் 2012 ஏப்ரல் கூறுவிலைகளும் முறையே ரூபா 150 முதல் ரூபா 8,000 வரையான வீச்சினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாது களஞ்சியப்படுத்தப்பட்ட உபகரணங்களின் விலைகளுடன் ஒப்பிடப்படுகையில் 10 விடயங்களுக்கு உரிய விலைகள் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 630 முதல் ரூபா 12,000 வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது.

(ஈ) ஊவா மாகாண கல்வி திணைக்களத்திற்கு கொள்வனவிற்காக 2011 ஒக்டோபர் 24 ஆம் திகதி கொள்வனவு குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நடன உபகரண விடயங்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில் கல்வி அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களுக்காக ரூபா 640 முதல் ரூபா 14,100 வரையான அளவில் கூடுதலான விலை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.13 முறையற்ற கொடுக்கல்வாங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆளுனரின் விடுதிக்கான ஓர் கட்டிடம் மாகாண சபைக்கு கையேற்கப்படுவதற்கு உரிய அடிப்படை மதிப்பீடான ரூபா 8,500,000 தொகையில் ரூபா 2,000,000 தொகை 2010 ஆம் ஆண்டின் போதும் ரூபா 6,500,000 தொகை மீளாய்வாண்டின் போதும் பதுளை பிரதேச செயலகத்திலும் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. வைப்புச் செய்யப்பட்ட தொகையான மொத்த மதிப்பீட்டில் 25 சதவீதமான ரூபா 2,125,000 இற்குப் பதிலாக மொத்த மதிப்பீடான ரூபா 8,500,000 தொகை வைப்புச் செய்யப்பட்டமையால் ரூபா 6,375,000 தொகை பதுளை பிரதேச செயலகத்தில் விளைவற்று வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாண மக்கட் போக்குவரத்து அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டின் போது 03 மோட்டார் வாகனங்கள் திருத்தப்படுவதற்காக 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 76,550 தொகை முன்னாள் தலைவரினதும் பொது முகாமையாளரினதும் பெயர்களுக்கும், மொனறாகலை “சிசுசெறிய” விளிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 6,500 தொகையும் மொனறாகலை நிலையப் பொறுப்பதிகாரியின் பெயரில் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஊவா மாகாண வானொலி சேவை உத்தியோகத்தரால் வேறு உத்தியோகத்தருக்கு உரித்தான சம்பள விபரம் சமர்ப்பிக்கப்பட்டு கோரப்பட்டிருந்த இடர் கடன் விண்ணப்பப் படிவம் ஒன்றிற்காக ரூபா 150,000 தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க நடனக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட அரங்கேற்ற நிகழ்விற்கான ஞாபகார்த்த சஞ்சிகை ஆக்கத்திற்காக ஏற்கப்பட்ட ரூபா 36,000 தொகை அவ்வாக்கத்திற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 317,500 தொகையான நிதி ஏற்பாட்டில் செலவிடாது ஊவா மாகாண கல்வி அமைச்சு செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்து.

(உ) வெலிமட வலயக் கல்வி அலுவலகத்தில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 88,500 கூட்டுத்தொகையான கடன் மீதி, காரணமின்றி முற்பணக் கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முறையான அங்கீகாரமின்றி வெளிநாட்டிற்குச் சென்றமையால் 2011 சனவரி மாதம் முதல் சம்பளக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்ட பதுளை மாவட்டத்தின் பாடசாலை ஒன்றில் ஓர் ஆசிரியருக்கு 2011 மார்ச் 20 ஆம் திகதி ரூபா 100,000 தொகையான இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தராக செயற்பட்ட உத்தியோகத்தருக்கு கெடவல, லன்தேவல, முதல் மொனறாகலை

வரை சராசரி தூரம் 80 கி.மீ. பயணிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட தூரம் 148 கி.மீ. ஆகக் காண்பிக்கப்பட்டு ரூபா 16,320 தொகையான போக்குவரத்துப் படிப்பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மாகாண இயந்திரப் பொறியியலாளர் அலுவலகத்தில் அங்கீகரிக்கப்படாத கணக்காளர் பதவியில் 04 ஆண்டு காலங்கள் கடமைகளை மேற்கொள்வதற்காக பிரதிப் பிரதம செயலாளர்கள் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் கணக்காளருக்கு மேலதிக ஊதியமாக ரூபா 237,381 தொகையும் லீவு நாட் சம்பளம் ரூபா 96,338 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) மாகாண இயந்திர பணிப்பாளரின் வீட்டுத்தொலைபேசியும் அலுவலக தொலைபேசிக்குமாக 2010 ஆம் ஆண்டிற்காக செலவிடப்பட்ட மொத்த பட்டியல் கட்டணத்தில் அங்கீகரிக்கப்பட்ட எல்லை கருத்திற்கொள்ளப்படாது கையடக்கத்தொலைபேசிக் கட்டணமான ரூபா 17,358 தொகை மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையிலிருந்து மாறுபடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 யூலை 08 ஆம் திகதிய ஊவா மாகாண நூலக சேவைச் சபையின் பிரதான கேட்போர் கூட மண்டபத்தின் மின் வெளிச்ச முறைமையைத் திருத்துவதற்காக முறையான கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாது செலவின மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்படாது தனியார் நிறுவனமொன்றிடமிருந்து திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒப்பந்தக்காரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 34,750 தொகையான பட்டியலுக்காக ரூபா 12,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2011 ஒக்டோபர் 13 கணக்காய்வுத் திகதி வரையிலும் அப் 17 வெளிச்ச முறைமைத் தொகுதிகளில் 05 மாத்திரமே செயற்படும் நிலையில் காணப்பட்டன.

(ii) கொள்வனவு நடைமுறை கோவையின் I ஆம் அத்தியாயத்தின் 1.2.1

ஆம் ஏற்பாடுகளின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாது பதுளை மகளிர் கல்லூரி பாடசாலையின் சிற்றுண்டிச்சாலை 2007 மே மாதம் முதல் 2011 செப்தெம்பர் வரை ஒரே தனியார் நிறுவனம் ஒன்றிற்கே 04 ஆண்டுகளுக்கு மேலான காலமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஓ) பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படாது பணம் விடுவிக்கப்பட்டமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிதிப் பிரமாணம் 137(5) மற்றும் 237(ஆ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக கினிகம பிரதான களஞ்சியத்திற்கு பொருட்களைக் கொள்வனவு செய்த 11 சந்தர்ப்பங்களின் போது பொருட்களைப் பெறுவதற்கு முன்னர் ரூபா 4,840,326 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தால் கல்விப் பிரிவின் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட தொகையில் 2011 மே 27 ஆம் திகதி ரூபா 349,944 தொகை செலுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2012 பெப்ரவரி 08 ஆம் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(ஔ) போதிய அதிகாரத்தால் சான்றுறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை மாத்திரமே பெற்று 2011 ஆம் ஆண்டின் போது பொது முகாமையாளருக்கு ரூபா 354,105 தொகையும் தலைவருக்கு

ரூபா 292,620 தொகையும் எரிபொருட் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஊவா மாகாண நூலக சேவைச் சபையிடமிருந்த பிரதான கேட்போர் கூட மற்றும் விரிவுரை மண்டபம் வழமையான அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்படாது 44 சந்தர்ப்பங்களின் போது வாடகைக்கு வழங்கி பல்வேறு நபர்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் ரூபா 225,900 கூட்டுத்தொகை அறவிடப்பட்டிருந்தது.

(iii) 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 ஒக்டோபர் 13 ஆம் திகதி வரை ஊவா மாகாண நூலக சேவைச் சபைக்கு உரித்தான பிரதான கேட்போர் கூட மற்றும் விரிவுரை மண்டபத்தை வெளியாட்களுக்கு வழங்குவது தொடர்பாக 115 சந்தர்ப்பங்களின் போது கட்டணங்கள் அறவிடப்படாதிருந்ததுடன் இதற்காக ஆகக் குறைந்தளவு கட்டணம் அறவிடப்பட்டிருப்பின் ரூபா 542,000 தொகை அறவிடப்பட்டிருக்கும்.

## 2.14 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஊவா மாகாண கல்வி அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்பிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஊவா மாகாண நூலக சேவைச் சபையின் மொனறாகலை மாவட்ட மத்திய நூலகத்திற்காக வசதிகள் வழங்கப்படுவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 இல் ரூபா 1,998,938 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்கள் உள்ளடங்கலாக அலுவலக

உபகரணங்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மொனறாகலை நூலகத்திற்கு வழங்கப்பட்டிராததுடன் ரூபா 72,500 செலுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட கணனி கல்வி அமைச்சின் கணக்குப் பிரிவின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. ஏனைய உபகரணங்களும் விளைவற்று ஊவா மாகாண நூலக சேவைச் சபைக் கட்டிடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் இதில் புத்தக இறாக்கை, வாசிப்பு மேசை மற்றும் குஷன் கதிரைகள் சிலவற்றிற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாண நூலக சேவைச் சபைக் கட்டிடத் தொகுதியில் நூலக சேவைச் சபை அலுவலகம், கேட்போர்கூடம், மத்திய நூலக ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகம், கஹகொல்ல இயந்திர பொறியியலாளர் அலுவலகத்திற்கு உரித்தான அலகும் சிற்றுண்டிச் சாலையாக 6 பிரிவுகள் செயற்படுத்தப்பட்டதுடன் சிற்றுண்டிச்சாலை தவிர்ந்த ஏனைய சகல பிரிவுகளுக்கும் ஒரே மானியிலிருந்து மின் விநியோகிக்கப்பட்டிருந்தது. மாதாந்த மின் பாவனைக்காக ரூபா 29,000 முதல் ரூபா 73,000 வரையான தொகையும் நீர்ப் பாவனைக்காக ரூபா 7,000 முதல் ரூபா 17,000 வரையான தொகையும் செலவிடப்பட்டிருந்தது. முின்சாரம் மற்றும் நீர்ப் பட்டியல்களில் நூற்றுக்கு 5 சதவீதம் சிற்றுண்டிச்சாலையிலிருந்து அறவிடப்பட்டதை அடுத்து மிகுதி அமைச்சால் ஏற்கப்பட்ட எனினும், ஏனைய நிறுவகங்களால் இதற்காக எவ்வித தொகையும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நேரப்பதிவாளர்கள் மூவரால் 39 பற்றுச்சீட்டுப் புத்தகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 1,370,600 தொகை 01 மாதத்திற்கும் 03 மாதத்திற்கும் இடைப்பட்ட காலதாமதத்துடன் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒஹிய களப் பயிற்சி நிலையம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் அடிப்படை வரைபடம், நிலஅளவைத் திட்டம் ஆகியவற்றைப் பெற்று காணியின்

எல்லைகளின் சரியான நிலை பூர்த்திசெய்திருக்கவில்லை. சரிவான இக் காணியைத் தேர்ந்தமை மற்றும் அமைப்பு தொடர்பான காணியின் நிலை தொடர்பான கவனத்தைக் கொண்டு கட்டிடத்தை நிர்மாணிப்பது தொடர்பான திட்டத்தைத் தயாரித்திராத காரணத்தால் மதிப்பீட்டின் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் காண்பிக்கப்படும் வகையில் ரூபா 5,867,002 தொகையான பாரிய செலவினத்தை ஏற்று காணியின் முன்பகுதியில் பாதுகாப்பு மதிலை நிர்மாணித்திருந்ததுடன், எதிர்காலத்திலும் பாதுகாப்பு மதிலுக்காக மேலும் செலவினங்களை மேற்கொள்ள நேரும் என்பது அவதானிக்கப்பட்டது. வேறு பொருத்தமான காணியொன்றைப் பெறாது இக் காணியைத் தெரிவுசெய்து இயற்கை அமைவிடம் தொடர்பான கவனத்தை எடுக்காது திட்டத்தைத் தயாரித்த காரணத்தால் இச் செலவினங்களை அரசாங்கத்திற்கு ஏற்க வேண்டிய மேலதிகச் செலவினமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. ஹோட்டன் தென்ன பாதுகாப்பு எல்லையில் அமைந்துள்ள 11 அறைகளினாலான இப் பயிற்சி நிலையத்தின் சமையலறையிலிருந்து அகற்றப்படும் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து இதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.15 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊவா மாகாண சபை நிதியத்திற்கு உரித்தான பிரதான நடைமுறைக் கணக்கின் மாதாந்த சராசரியான மீதி ரூபா 430 மில்லியன் தொகை ஆண்டு பூராவும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) ஊவா மாகாண சபைக்குரிய பிரதான நடைமுறைக் கணக்கின் வழமையான சேமிப்புக் கணக்கிற்கு மீளாய்வாண்டின் போது யூன் மற்றும் யூலை மாதங்களில் மாற்றப்பட்டிருந்த ரூபா 425,000,000 தொகை 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மாற்றப்பட்டிருப்பின் ரூபா 7,833,300 தொகையான மேலதிக மொத்த வட்டி வருமானம் உழைக்கப்படுவதற்கான இயலுமை காணப்பட்டது.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது குடா முத்தட்டுவே எனும் பெயரிலான

காணியைக் கையேற்றமைக்காக பதுளை பிரதேச செயலாளரின் அண்மித்த மதிப்பீடான ரூபா 1,500,000 தொகையும், 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 783,000 தொகையும் பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டுத் திணைக்களம் காணிக்குரித்தான மதிப்பீட்டுப் பெறுமதியை நிச்சயமாகக் குறிப்பிடாது, வைப்புச் செய்யப்பட வேண்டிய குறித்த தொகையாகிய அண்மித்த மதிப்பீட்டில் நூற்றுக்கு 25 சதவீதமான ரூபா 375,000 இற்காக அண்மித்த மொத்த மதிப்பீடு உள்ளடங்கலாக ரூபா 2,283,000 தொகை வைப்புச் செய்யப்படமையால் ரூபா 1,908,000 தொகை விளைவற்று நீண்டகாலமாக பதுளை பிரதேச செயலக அலுவலகத்தில் வைப்பாகக் காணப்பட்டது.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண வருமானத் திணைக்களத்தால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படாது வைத்துக்கொள்ளப்பட்டிருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 267,968,094 தொகையானதுடன் விடுவிக்கப்படாது நீதிமன்றத் தண்ட வருமானம் ரூபா 191,651,642 ஆகக் காணப்பட்டது.

(உ) 2011 ஆம் ஆண்டின் போது முத்திரைக் கட்டண வருமானமாக மாகாண சபைக்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 125,582,791 தொகையில் ஊவா மாகாண வருமானத் திணைக்களத்தால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ரூபா 12,864,365 விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் ரூபா 96,156,135 தொகை நீதிமன்றத் தண்டப்பண வருமானத்திலிருந்து ரூபா 9,069,360 தொகை மாத்திரமே விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2011 ஆம் ஆண்டின் போது முத்திரைக் கட்டண வருமானத்தில் 12 பிரதேச சபைகளுக்கு நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தில் 09 பிரதேச சபைகளுக்கு எவ்வித தொகையும் வழங்கியிருக்கவில்லை.

(எ) இரு நலன்பெறுனர்களால் நோய்வாய்ப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட கோரல்களின் பிரகாரம் அமைச்சு நிதியத்திலிருந்து ரூபா 100,000 தொகையான உதவிப் பணத்தை வழங்குவதற்கு ஒரு வருடத்தை அண்மித்த காலம் கடந்திருந்ததுடன் வழங்கப்பட்ட

உதவிப்பணத்திற்காக வரையப்பட்ட காசோலைகள் வங்கிக்கு அவை செலுத்தப்பட்டு 07 மாதங்களிற்கு மேற்பட்ட காலம் கடந்ததை அடுத்தே வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந் நலன் உரிய நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டமைக்கு உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 செப்தெம்பர் 09 ஆம் திகதிய 1722/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 01 ஆம் பந்தியின் பிரகாரம் 2001 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் பிரதான செயலாளர் அலுவலகத்தில் செயற்படவேண்டியிருந்த மோட்டார் வாகனங்களுக்காக அறவிடப்பட வேண்டிய வருடாந்த வருமான அனுமதிப்பத்திரக் கட்டணத் திருத்தம் ஊவா மாகாணத்தில் 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுவதனால் ரூபா 4,029,020 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணமும் தண்டப் பண வருமானமும் மாகாண சபைக்கு கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஐ) பஸ்ஸர பிரதேச செயலகத்தால் 2011 ஆம் ஆண்டின் குறித்த பணிக்கான முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ரூபா 387,500 தொகையான 17 செயற்திட்ட தீர்மானங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கலால்வரி ஆணையாளர் நாயகத்தின் 2010 செப்தெம்பர் 27 ஆம் திகதிய ஈசீ/ஜீ/ஆர்/எல்/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த காலத்தின் போது கலால்வரி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிராத ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவின் அனுமதிப்பத்திரம் பெற்ற இருவரிடமிருந்து ரூபா 80,500 தொகையும், பண்டாரவெல பிரதேச செயலகப் பிரிவின் அனுமதிப்பத்திரம் பெற்ற 06 பேரிடமிருந்து ரூபா 76,049 தொகையான தாமதக் கட்டணமும் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஓ) குறித்த பணிக்கான முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பண்டாரவளை பிரதேச செயலகத்தால் 2011 ஆம் ஆண்டின் போது 42 நலன்பெறுனர்களுக்கிடையே பகிரப்பட்ட ரூபா 629,259 பெறுமதியான பொருளுதவி தொடர்பாக அவை குறித்த பணிக்காகப்

பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பயன்பாட்டிற்கு எடுக்கப்படக்கூடிய எனினும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 05 மோட்டார் சைக்கிள்கள் அலுவலகத்தில் இருக்கையில் ரூபா 139,900 தொகை செலவிடப்பட்டு 2010 திசெம்பர் 29 ஆம் திகதி புதிய மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(க) மஹியங்கனை தம்பானை பிரதேசத்தின் 48 விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்காக ரூபா 126,945 பெறுமதியான் 93 கிலோகிராம் போஞ்சி விதைகள் வழங்கப்பட்டிருந்தது. அங்கு தெரிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வின் போது 10 நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 13,650 பெறுமதியான 21 கிலோகிராம் போஞ்சி விதைகளைப் பரீட்சிக்கையில் எவ்வித விளைச்சலும் இன்மையால் விவசாயிகள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியிருந்தனர்.

(கா) மாவட்ட இயந்திர அலுவலகத்திற்கு உரித்தான 06 உடைந்த இயந்திரங்களைத் திருத்துவதற்குத் தேவையான மேலதிக உதிரிப்பாகங்கள் சந்தையில் இன்மையால் 2008 ஆம் ஆண்டு முதல் அலுவலக வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் இதன் படி அவ்வியந்திரத்தை கைதவிர்ப்பதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.16 செயலாற்றல்

### 2.16.1 நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்

---

2011 யூன் முதல் நவம்பர் வரை பதுளை தேசிய வைத்தியசாலையில் பாலியல் நோய்த்தடுப்புப் பிரிவில் மல்டி ஸ்கான் ஈஎக்ஸ் (ரீடர்) ஆய்வுகூட முறைமைகள்) (Multiskan EX (Reader) Lab Systems) இயந்திரத்தைத் திருத்துவதற்காக அனுப்பப்பட்டிருந்த காலத்தின் போது அவ்வியந்திரத்தைப் பயன்படுத்தி 2,578 எச்ஐவீ எலைஸா (HIV Elisa) பரிசோதனைகள் நடாத்தப்பட்டதாக வீடீஆர்எல் (VDRL) பதிவேட்டின் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இயந்திரம் செயற்பாடற்றிருந்த காலப்பகுதியின் போது எச்ஐவீ எலைஸா (HIV Elisa) பரிசோதனைகளை மேற்கொண்டு நோயாளிகளின் அவதானிப்பை வழங்குவது தவறான தகவல் என்பது கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதிருந்தது. இவ்வியந்திரத்தைப் பயன்படுத்தாது வழங்கப்படும் அறிக்கைகளின் சரியான தன்மை சந்தேகத்திற்கிடமாகக் காணப்பட்டது.

**2.16.2 போதியளவில் மேற்கொள்ளப்படாத நோக்கங்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊவா மாகாணத்திற்காக அரச இசைக் குழு ஒன்றை உருவாக்கும் நோக்கில் 2010 ஆம் ஆண்டின் போது கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்காக விசேட தெரிவுக் குழு ஒன்றை நியமித்து நேர்முகத் தேர்வுகள் நடாத்தி கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, உபகரணங்களுக்காக ரூபா 908,310 செலவிட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 வரை இசைக் குழு ஒன்று உருவாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாணத்தில் குடியிருக்கும் பாடசாலை விட்டு விலகிச் சென்ற இளைஞர் யுவதிகளின் கலைத் திறனை உயர்த்துவது, மாகாண கலாசார பெறுமதிகளைப் பேணிக்காத்து எதிர்கால சந்ததிக்கு வழங்குதல், மாகாணக் குடியிருப்பாளர்களின் இரசனையை மேம்படுத்துதல் மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற விழாவிற்காக தேவையான கலாச்சார அம்சங்களை வழங்குவது உள்ளடங்கலாக பல

நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு அழகியற் கலைகள் பல்கலைக்கழக தொழிநுட்ப ஆலோசனை மற்றும் கண்காணிப்பின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 4,551,850 தொகை செலவிட்டு உருவாக்கப்பட்ட மாகாண அரச நடனக் குழு, கலைஞர்கள் குழு கைவிட்டுச் செல்லல், வெற்றிடத்தை நிரப்புவதற்காக செயற்படாமை, செலவினத்திற்கு ஒப்பாக வருமானம் கிடைக்காமையும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நிரந்தர ஆசிரியை ஒருவர் இன்மை போன்ற காரணங்களால் தோல்வியுற்றிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,395,000 ஆன போதிலும் நடனக்குழு உருவாக்கப்பட்டு 09 மாதங்களுக்கு மேற்பட்ட கணக்காய்வுத் திகதியான 2012 யூலை 25 ஆம் திகதி வரையிலும் எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெலிஓய 2006 சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட நிதி ஏற்பாடு ரூபா 2,905,923

---

மேற்குறித்த செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,905,923 தொகையான ஏற்பாட்டில் ரூபா 339,553 மட்டுமே செலவிடப்பட்டிருந்ததுடன் இது ஏற்பாட்டில் 11.6 சதவீதமாகும்.

(ii) 2012 சனவரி மாதத்தின் போது இச் செயற்திட்டம் ஆய்வு செய்யப்படுகையில் வனப் வளர்ப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த குறிப்பாக இனங்காணப்பட்டிருந்த 05 ஹெக்டேயர் நில அளவு 180 பேர்ச் அளவான வனவளர்ப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) மொ/நாலந்தா மஹா வித்தியாலத்தின் குடும்பஸ்தர்களுக்காக

உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணிக்கப்படுவதற்கும் மற்றும் மொ/லகினகல கனிஷ்ட வித்தியாலயத்தின் நூலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,000,000 இல் உரிய நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) திராட்சைப் பயிர்களின் 50 கூறுகள் ஸ்தாபிக்கப்படுவதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் திராட்சைப் பயிர்கள் அனைத்தும் சேதமுற்றிருந்தன.

(v) நீல மஹா கல் அமுன செயற்திட்டத்தின் கீழ் ரூபா 189,568 செலவிட்டு பொருத்தப்பட்டிருந்த ஓடையின் பின்புற (மண் கதவு) கதவு நிலையின் இருமருங்கிலும் தூண்களால் வேறாக்கப்பட்டு கழன்று நீர் வெளியில் கசிந்து காணப்பட்டது.

(vi) முறையான சாத்தியவளக் கற்கையை மேற்கொள்ளாது பயிர்ச்செய்கைக்காக பயிரினங்கள் வழங்கியதன் காரணமாக அலுத்வெவ மில்லகமவில் குடியிருக்கும் விவசாயி ஒருவரால் பயிரிடப்பட்ட 6.5 ஏக்கர் காணி வனவளப் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டமையால் 40 மாமரங்கள், 32 தென்னம் பயிர்கள், 100 தோடம்பழப் பயிர்கள் உள்ளடங்கலாக பயிர்ச்செய்கை நிலம் அவருக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஈ) இலங்கை மின்சார சபைக்கு ரூபா 13,245,101 தொகை செலுத்தி தியதலாவை ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு 2012 செப்தெம்பர் 17 ஆம் திகதி வழங்கி ஸ்தாபிக்கப்பட்டிருந்த மத்தியதரப்படுத்தப்பட்ட குளிரூட்டல் முறைமை ஸ்தாபிக்கப்பட்ட நாள்முதல் முறையாக செயற்படாததன் காரணமாக வைத்திய நிபுணர் உள்ளடங்கலாக வைத்தியசாலைப் பதவியணியினர் பாரிய சிரமத்திற்கு உள்ளாகியிருந்தனர்.

## 2.17 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்டச் செயற்படுத்தலிலான நலிவுகள்

2010 ஒக்டோபர் 02 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 856,026,287 தொகையான ஊவா மாகாண வீதி நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் கீழ் கலஉட, கந்தகெட்டிய, கரமெட்டிய வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கைத்தொழில் 2 ஆண்டுகளால் அதாவது 2012 ஒக்டோபர் 30 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. இக் கைத்தொழில் தொடர்பாக 2011 நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஓப்பந்தக் காலத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2011 நவம்பர் 09 ஆம் திகதி கடைசியாகச் செலுத்தப்பட்ட பட்டியலின் படி ஒப்பந்தத்தின் மொத்த வேலைகளின் பெறுமதி ரூபா 57,225,328 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், ஒப்பந்த நிர்மாணிப்புகளின் பௌதீக முன்னேற்றம் 6.67 சதவீதமான மிகவும் குறைவான மட்டத்தில் நிலவியதுடன் ஒப்பந்தத்தின் அடிப்படை 5 நிர்மாணிப்புச் செயற்பாடுகளில் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி மிகவும் குறைவான நிலையில் காணப்பட்டது. இவ்வாறே இச் செயற்பாடு 2013 திசெம்பர் மாத இறுதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் 2013 திசெம்பர் 31 வரை நிர்மாணிப்புகளின் பௌதீக முன்னேற்றம் ரூபா 454,486,988 அதாவது 52 சதவீதமாகக் காணப்பட்டது.

(ii) 15 விடயங்களின் முக்கிய நிர்மாணிப்புகள் உடன்படிக்கையிடப்பட்ட அளவைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளில் மேற்கொள்ளப்பட்ட வேலை அளவுகள் 0.4 சதவீதத்திலிருந்து 53 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(iii) ஒப்பந்தக்காரர்களால் இது வரையில் எத்தகைய நிர்மாணிப்புகளும் ஆரம்பிக்கப்பட்டு 13 முக்கிய விடயங்களின் பெறுமதி ரூபா 200 மில்லியனை மிகைத்திருந்தது.

(iv) இரண்டு வருட உடன்படிக்கையிடப்பட்ட ஒப்பந்தக் காலத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டிருந்த போதிலும் ஆரம்ப ஒப்பந்தத் தொகை ரூபா 122.9 மில்லியன் தொகையால் அதாவது 16 சதவீதத்தால் திருத்தப்பட்டிருந்தது. 21 விடயங்களின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் அளவைப்பத்திரங்களின் அளவுகளிற்கும் உடன்படிக்கையிடப்பட்ட அளவைப்பத்திரங்களின் அளவுகளிற்கும் இடையே 59 சதவீதத்திலிருந்து 11011 சதவீதம் வரையிலான வேறுபாடு காணப்பட்டது.

(v) ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 110,760,124 தொகையான செயற்பாட்டிற்கு முன்னைய முற்பணத் தொகையில் எவ்வித தொகையும் 2011 நவம்பர் மாதமளவிலும் அறவிடப்பட்டிராததுடன் 2013 திசெம்பர் மாதமளவிலும் மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்த தொகை ரூபா 78,270,488 ஆகக் காணப்பட்டது.

(vi) கட்டாயப் பதவியணியினரின் 04 பதவிகள் 2011 திசெம்பர் மாதத்தில் கணக்காய்வுச் சந்தர்ப்பத்தின் போது வெற்றிட நிலையில் காணப்பட்டதுடன் நவம்பர் மாதத்தின் போது பரிந்துரைக்கப்பட்டிருந்த 4530 இயந்திர மணித்தியாலங்களில் 3208 இயந்திர மணித்தியாலங்களே வேலை செய்யப்பட்டிருந்தது.

(vii) ஒப்பந்தக்காரரின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்கு உரித்தான ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட தெரிவுச் செவ்வையில் தோல்வியுறுகையில் அச் செயற்பாட்டை நிறுத்துவதற்கோ அல்லது திருத்துவதற்கோ ஆலோசனைக் கம்பனி உத்தியோகத்தர்களுக்கு இயலாதென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(viii) ஆலோசனைக் கம்பனிக்கு உரித்தான தொழிநுட்ப உத்தியோகத்தர்களுடன் 3 +

---

670 கிலோமீற்றர் பகுதியில் நிர்மாணிக்கப்படும் பாலத்திற்கு கொங்கிறீட் இடும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட களப் பிரிசோதனையின் போது கொண்டுவரப்பட்டிருந்த 2.5 மீட்டர் கியூப் கொங்கிறீட் அளவிலான ஸ்லம் ஆய்வு தெரிவுச் செவ்வை தோல்வியுற்றிருந்தமையால் விளைவு 100 மிமி இற்கும் 150 மிமி இற்கும் இடையிலிருக்க வேண்டிய அத் தெரிவின் அளவு 70 மிமி ஆகக் காணப்பட்டது. அத் தர ஆய்வில் தோல்வியுற்ற கொங்கிரீட் கலவை பாலத்திற்கு இடப்பட்டிருந்ததுடன் அதனைத் தடுப்பதற்கோ திருத்துவதற்கோ ஆலோசனைக் கம்பனியின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்கு இயலுமை இருக்கவில்லை.

(ix) நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த 51 வாய்க்கால்களில் 8 வாய்க்கால்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கொங்கிரீட் குற்றிகளின் திரள் உறுதி ஆய்வின் போது ஆய்வு தோல்வியுற்றிருந்தது. அவ்வாய்வின் போது 20/20 ஆக இருக்க வேண்டிய பெறுமதி தர ஆய்வின் போது 14 இற்கும் 19 இற்கும் இடைப்பட்ட பெறுமதியைக் கொண்டிருந்தது.

(x) செயற்திட்டத்திற்குரித்தான 136 கால்வாய்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு இனங்காணப்பட்டிருந்ததுடன் இதிலிருந்து 15 + 020 முதல் 19 + 967 கிலோ மீற்றர் வரை 17 கால்வாய்களுக்கான திட்டங்கள் இது வரை ஆலோசனைக் கம்பனியால் அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) வீதியை விஸ்தரிக்கையில் மீள ஸ்தாபிக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட 96 மின்கம்பங்களும் 120 தொலைபேசிக் கம்பங்களும் செயற்திட்டக் காலப்பகுதியில் 50 சதவீதத்திற்கு மேலாக இருந்த போதிலும் மீள ஸ்தாபிக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் வீதியின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தாமதமடைவதற்கு இவ் விடயங்களும் காரணமாகியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்படல்

---

மொனறாகலை பிரதேச பொறியியல் (கட்டிடம்) அலுவலகத்தால் 2010 திசெம்பர்

23 ஆம் திகதி ரூபா 5,160,748 தொகையான மதிப்பீட்டுக் கிரயத்திற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த கும்புக்கன கிமன்ஹலே வண்டித் தரிப்பிடம் மற்றும் மலசலகூட முறைமை நிர்மாணிப்புச் செயற்திட்டம் 2011 திசெம்பர் 31 வரை ரூபா 1,030,000 தொகையான வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் பிரதேசவாசிகளிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புகளின் காரணமாக செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(இ) நிர்மாணிப்புகள்

நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தொடர்பான கள ஆய்வின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில் சபுகஸ் உல்பத கெத்யாய மற்றும் ஓடைப் பகுதிக்கு சேதமடைவதைத் தடுப்பதற்கு அணையொன்றைக் கட்டுவதற்கு சபுகஸ் உல்பத விவசாய அமைப்பிற்கு ரூபா 421,101 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பௌதீக ஆய்வின் போது தனியார் காணியொன்றினதும் வீட்டினதும் மண்சரிவைத் தடுப்பதற்காக இவ்வணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்து.

(ii) இசுறு பாடசாலைச் செயற்திட்டத்தின் கீழ் மொ/ மடுல்ல மஹா வித்தியாலத்தின் நிர்மாணிப்பதற்காக கொடுப்பனவு செய்யப்படுகையில் ரூபா 75,716 தொகையும் பிதுனுவெவ சேவை ஒருங்கமைப்பு நிறுவனத்தின் பின்னறுவடை தொழிநுட்ப கட்டிட நிர்மாணிப்புத் துறைக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் ரூபா 34,308 தொகையும் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் மொனறாகலை ஜீலொன் பங்களாவின் மர வேலி நிர்மாணிப்புத் துறைக்காக ரூபா 11,959 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.18 மாகாண கட்டுப்பாட்டு நிறுவனக் கண்காணிப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

மாகாண சபைக் கண்காணிப்புகள் மற்றும் கட்டுப்பாட்டின் கீழான ஊவா மாகாணத்தில்

உள்ள 28 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகளைக் கருத்திற்கொள்கையில் இக் கண்காணிப்பு நடவடிக்கைகள் திருப்திகரமாகச் செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**(அ) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

ஊவா மாகாண சபையில் உள்ள 28 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மீளாய்வாண்டிற்காக குறித்த தினத்தில் 06 நிறுவனங்கள் மாத்திரமே நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்தன.

**(ஆ) நிலுவை வருமானம்**

(i) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஊவா மாகாண உள்ளூராட்சி நிறுவகங்களுக்குக் கிடைக்க வேண்டிய இறை வரி மற்றும் ஏனைய வருமானத் தொகையான ரூபா 238,383,139 நிலுவையாகக் காணப்பட்டன.

(ii) 1979 இன் 42 ஆம் இலக்க மாநகர சபை மற்றும் நகர சபை (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினதும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 129(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரமும் உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டண வருமானத் தொகையான ரூபா 134,558,141 உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வழங்கப்பட்டிருந்த மிகைஅறவீட்டுச் சான்றிதழுக்காக அறவிடுவதற்குள்ள பணம்

ஆண்டின் இறுதியில் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவக உத்தியோகத்தர்களுக்கும் முகவர்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த 74 மிகைஅறவீடுகளுக்காக ரூபா 6,971,291 தொகையை அறவிட வேண்டியிருந்தது.

**2.19 உள்ளகக் கணக்காய்வு**

வீதிப் பராமரிப்பிற்கும் வீதிப் புனரமைப்பிற்காகவும் 215 செயற்திட்டங்கள் மற்றும்

விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் நடைமுறைவேலைக் கைத்தொழில்களுக்காக ரூபா 300 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை மாகாண சபையின் மொத்த மூலதன ஏற்பாட்டில் 8.6 சதவீதமாகக் காணப்பட்டது. இம் மூலதனச் செலவினக் கண்காணிப்பிற்காக நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.20 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.21 கணக்காய்வுக் குழு

மாகாண சபையின் நிதி நுண்ணியல் நிதி முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்காக மாகாண சபையின் 24 அமைச்சு/ திணைக்களங்களின் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) மாகாண சபை அபிவிருத்தி திட்டம்
(ஈ) உள்ளகக் கணக்காய்வு
(உ) உள்ளூராட்சி அதிகாரசபை கண்காணிப்பு
(ஊ) பதவியணி முகாமைத்துவம்
(எ) சொத்து முகாமைத்துவம்
(ஏ) ஒப்பந்த முகாமைத்துவம்

(ஐ) வங்கியிலிடல்